**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.38
https://ngmtamil.in/

# தமிழரின் பண்பாட்டுக் கூறுகளும் வாழ்வியல் விழுமியங்களும்

**திருமதி.ஜெ. தனலட்சுமி**
உதவிப்பேராசிரியர், மொழிகள் துறை – தமிழ்
கற்பகம் உயர் கல்விக் கழகம், கோயம்புத்தூர்.
dhanalakshmi.jagadeeshwaran@kahedu.edu.in, ORCID ID: 0009-0008-2749-2283

**முன்னுரை**

ஒரு சமூகத்தின் வாழ்வியல் முறை, சிந்தனைத் தெளிவு, கலை, இலக்கியம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தப் பிரதிபலிப்பே பண்பாடு எனப்படுகிறது. உலக நாகரிகங்களின் தொட்டில் என வர்ணிக்கப்படும் தமிழ் மண்ணின் பண்பாடு, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகாலத் தொடர்ச்சியைக் கொண்டது. பிற பண்பாடுகள் காலவெள்ளத்தில் மறைந்துபோன நிலையிலும், தமிழர் பண்பாடு இன்றும் உயிர்ப்புடன் இருப்பதற்குக் காரணம் அதன் நெகிழ்வுத்தன்மையும், மனிதநேய அடிப்படையுமே ஆகும்.**"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி" என்ற புறப்பொருள் வெண்பாமாலைத் தொடர் தமிழரின் தொன்மையை உணர்த்துகிறது.** பழந்தமிழர்கள் தங்களின் அக வாழ்க்கையையும் புற வாழ்க்கையையும் அறத்தின் அடிப்படையில் எவ்வாறு அமைத்துக் கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளுடன் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திணைக்கோட்பாடும் இயற்கையோடு இயைந்த வாழ்வும்**

உலகில் வேறு எந்த மொழி இலக்கியத்திலும் காண முடியாத ஒரு தனித்துவமான சிறப்பம்சம் தமிழரின் **'திணைக்கோட்பாடு'** ஆகும். பழந்தமிழர்கள் நிலத்தையும் பொழுதையும் முதற்பொருளாகக் கொண்டு, மனித வாழ்க்கையை இயற்கையோடு இணைத்துப் பார்த்தனர்.

தொல்காப்பியர் நிலத்தை ஐந்து திணைகளாகப் பகுத்தார்

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்"** (தொல்,பொருள்- 5)

**குறிஞ்சி**: மலையும் மலை சார்ந்த இடமும்

**முல்லை:** காடும் காடு சார்ந்த இடமும்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**மருதம்:** வயலும் வயல் சார்ந்த இடமும்

**நெய்தல்:** கடலும் கடல் சார்ந்த இடமும்

**பாலை:** மணலும் மணல் சார்ந்த இடமும்

தமிழர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபடவில்லை; மாறாக இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். மரங்களையும், செடிகொடிகளையும் தம் உடன்பிறப்புகளாகக் கருதிய உயரிய பண்பாடு தமிழருடையது என்பதை பின்வரும் நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

**விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,**
**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,**
**'நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப;**
**நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்' என்று,**
**அன்னை கூறினள், புன்னையது நலனே** (நற்றிணை 172:1-5)

மேற்கண்ட பாடலில் விளையாடி வளர்ந்த புன்னை மரத்தைத் தனக்கு அக்காள் எனக் கூறும் தலைவியின் கூற்று, தமிழரின் சுற்றுச்சூழல் அறிவியலுக்குச் சான்றாகும்.

**விருந்தோம்பல் பண்பும் இல்லற அறமும்**

தமிழர் பண்பாட்டின் தலையாயக் கடமையாகக் கருதப்படுவது விருந்தோம்பல் ஆகும். இல்லற வாழ்க்கையின் முதன்மை நோக்கமே வந்த விருந்தினரைப் பேணுதல்தான் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் ஒருசேர வலியுறுத்துகின்றன. வள்ளுவர் இல்லற இயலில் விருந்தோம்பலுக்குத் தனி அதிகாரமே ஒதுக்கியுள்ளார்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"** (திருக்குறள்: 81)

அதாவது, வீட்டில் இருந்து பொருள் சேர்த்து வாழ்வதெல்லாம், வரும் விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும் என்கிறார். மேலும் முகம் மலர்ந்து விருந்தினரை உபசரிக்கும் பண்பை,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குநழ்யும் விருந்து.** (திருக்குறள்- 90)

என்ற குறளின் மூலம் விளக்குகிறார்.

சங்க இலக்கியமான நற்றிணையில், நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து உணவளிக்கும் நற்பண்பைக் கொண்டவள் தமிழ்ப் பெண் என்று போற்றப்படுகிறது:

**"அல்லிலா யினும் விருந்துவரின் உவக்கும்"** (நற்றிணை: 142)

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் தான் இழந்த பெருந்துயரமாகக் குறிப்பிடுவது,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,**

**துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்**

**விருந்து எதிர்கோடலும், இழந்த என்னை, நும்**

**பெருமகள்-தன்னொடும் பெரும் பெயர்த் தலைத் தாள்** (சிலம்பு கொ.காதை – 7)

இதன் மூலம், விருந்தோம்பல் என்பது தமிழர்களின் குடும்ப அமைப்பின் அடித்தளமாக இருந்தது தெளிவாகிறது.

**பழந்தமிழரின் போரறமும் நெறிதவறா வீரமும்**

தமிழர்கள் வீரத்தைப் போற்றிய அதே வேளையில், போரிலும் உன்னதமான அறநெறிகளைப் பின்பற்றினர். வலிமையற்றவர்களுடனும், போரிடத் தகுதியற்றவர்களுடனும் போரிடுவதைத் தமிழ்ப் பண்பாடு நாகரிகமற்ற செயலாகக் கருதியது.

புறநானூற்றுப் பாடல் ஒன்று பழந்தமிழரின் போரறத்தை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீ ரும்**

**எம்அம்பு கடிவிடுது நும்அரண் சேர்மின்"** (புறநானூறு 9)

புலவர் நெட்டிமையார் பாடிய இப்பாடலில், போர் தொடங்குவதற்கு முன்னால் பசுக்கள், அந்தணர்கள், பெண்கள், நோயாளிகள், பிதிர்க்கடனைச் செலுத்தாதவர்கள் ஆகியோரைப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு எச்சரிக்கும் வழக்கம் இருந்தது குறிப்பிடப்படுகிறது. முதுகில் புண்படுவதை அவமானமாகக் கருதி, வடக்கிருந்து உயிர் நீத்த சேரமான் பெருஞ்சேரலாதன் வரலாறு, தமிழரின் மான உணர்விற்கும் வீரத்திற்கும் சான்றாகும். புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் "வெட்சி" முதல் "பாடாண்" வரையிலான திணைகள், தமிழரின் முறையான போர் நெறிமுறைகளை வகுத்துக் காட்டியுள்ளன.

**கொடைத் திறனும் ஈகை உணர்வும்**

செல்வத்தின் பயனே பிறருக்குக் கொடுத்து மகிழ்வதுதான் என்பது தமிழரின் பொருளாதாரச் சிந்தனை.

**"செல்வத்துப் பயனே ஈதல்,**

**துய்ப்போம் எனினே தப்புந பலவே" (புறநானூறு: 189)**

என்று மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் குறிப்பிடுகிறார்.

தமிழ் வரலாற்றில் கடையெழு வள்ளல்களான பாரி, ஓரி, காரி, ஆய், அதியமான், நல்லி, பேகன் ஆகியோரின் கொடைத்திறன் உலகப் புகழ்பெற்றது.

- படரக் கொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தன் அரச ரதத்தைத் தந்தான் பாரி.
- குளிரில் நடுங்கிய மயிலுக்குத் தன் போர்வையைப் போர்த்தினான் பேகன்.

- தனக்குக் கிடைத்த, சாகா வரம் தரும் நெல்லிக்கனியைத் தமிழ் வாழ வேண்டும் என்பதற்காக ஔவையாருக்கு ஈந்தான் அதியமான்.

இவை வெறும் கதைகளல்ல, மனிதநேயத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடுகள். "ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலை விட உயிர்விடுதல் மேலானது" என்ற உயரிய சிந்தனை சங்கத் தமிழர்களிடம் இருந்தது.

**உலகளாவிய மானுட நெறியும் சமத்துவச் சிந்தனையும்**

பண்டையக் காலத்தில் மனிதர்களை எல்லைகளுக்குள்ளும், சாதி, இனக் குழுக்களுக்குள்ளும் அடைக்க முற்பட்ட சமூகங்களுக்கு மத்தியில், உலகமே தன் ஊர் என்று பிரகடனப்படுத்திய பெருமை தமிழரையே சாரும்.

கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று வரிகள் தமிழ்ப் பண்பாட்டின் உலகளாவிய பார்வைக்கு மகுடமாகும்:

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறநானூறு: 192)**

எல்லா ஊரும் என்னுடைய ஊர், எல்லா மக்களும் என்னுடைய உறவினர்கள் என்ற இச்சிந்தனை, ஐக்கிய நாடுகள் சபையின் (UN) சுவர்களில் கூட ஒளிர்கிறது.

இதேபோல், பிறப்பின் அடிப்படையில் மனிதர்களைப் பிரிக்கக் கூடாது என்ற சமத்துவச் சிந்தனையை வள்ளுவம் விதைத்தது:

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்" (திருக்குறள்: 972)**

அதிகார வர்க்கத்திற்கும், சாதியக் கட்டமைப்புகளுக்கும் எதிராகச் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் முன்வைத்ததே தமிழர் பண்பாட்டின் ஆகச்சிறந்த கூறாகும்.

**கலை, கட்டிடக்கலை மற்றும் அழகியல்**

தமிழர்களின் கலை மற்றும் அழகியல் உணர்வு அவர்களின் கட்டிடக்கலையிலும், சிற்பக்கலையிலும், ஆடற்கலைகளிலும் வெளிப்படுகிறது. கற்களைக் கவிதைகளாக மாற்றிய பெருமை தமிழர்களுக்கு உண்டு.

**கட்டிடக்கலை**

இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெரிய கோயில் (ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாக நிற்கும் பொறியியல் அதிசயம்), மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில்கள், மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் விண்ணுயர்ந்த கோபுரங்கள் ஆகியவை தமிழரின் கட்டிடக்கலை உன்னதத்தைச் சாற்றுகின்றன.

**இசையும் நடனமும்**

சிலப்பதிகாரத்தின் 'அரங்கேற்று காதை' மாதவியின் நாட்டியப் பயிற்சி மற்றும் பழந்தமிழரின் இசைக் கோட்பாடுகள் குறித்து மிக விரிவாகப் பேசுகிறது. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசைகளும், 'பண்' முறைகளும் இன்றைய இசை வடிவங்களுக்குத் தாய் வடிவங்களாகும்.

**நெசவு மற்றும் ஆடை**

ரோமானியப் பேரரசுக்கே ஆடை ஏற்றுமதி செய்தவர்கள் தமிழர்கள்."பாம்பின் தோல் போன்ற மெல்லிய ஆடைகள்" நெய்யப்பட்டதாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. தமிழர்களின் பாரம்பரிய உடைகளான வேட்டியும், புடவையும் (Saree) அவர்களின் கலாச்சார அடையாளமாக இன்றும் திகழ்கின்றன.

**அறிவியல் சார்ந்த வாழ்வியலும் விழாக்காணலும்**

தமிழர்களின் பண்பாடும் திருவிழாக்களும் வெறும் பொழுதுபோக்கிற்காக உருவானவை அல்ல; அவை ஒவ்வொன்றின் பின்னணியிலும் ஆழமான அறிவியலும், நன்றியுணர்வும் கலந்திருந்தன.

**பொங்கல் திருவிழா**

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருந்த சூரியனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் மாபெரும் பண்பாட்டு விழா. இயற்கையைத் தொழுவதே தமிழரின் முதன்மை அறம் என்பதை இவ்விழா உணர்த்துகிறது.

**ஏறுதழுவுதல் (ஜல்லிக்கட்டு)**

முல்லை நிலத்து மக்களின் வீர விளையாட்டான இது, மாடுகளுக்கும் மனிதர்களுக்குமான உறவையும், தமிழர்களின் கால்நடைப் பராமறிப்பு அறிவியலையும் காட்டுகிறது. கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிய விரிவான வர்ணனைகள் உள்ளன.

**நீர் மேலாண்மை**

**"நீரின்றி அமையாது உலகு"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, கரிகால் சோழன் கட்டிய **'கல்லணை'** உலகின் மிகப்பழமையான, இன்றும் பயன்பாட்டில் உள்ள அணைக்கட்டாகும். ஏரிகளையும் குளங்களையும் வெட்டி, நீரைப் பகிர்ந்து பயன்படுத்திய தமிழரின் நீர் மேலாண்மை உலகிற்கே முன்னோடியானது.

**முடிவுரை**

தமிழர் பண்பாடு என்பது வெறும் கடந்த காலப் பெருமை மட்டுமல்ல; அது நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் வழிகாட்டும் ஒளிரும் விளக்கு. அன்பு, அறம், வீரம், கொடை, விருந்தோம்பல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உலகளாவிய சகோதரத்துவம் போன்ற உன்னதக் கூறுகளைத் தன்னுள்

கொண்டுள்ளதால்தான், அது காலங்கள் கடந்தும் அழியாத 'செம்மொழிப் பண்பாடாக' நிமிர்ந்து நிற்கிறது. நவீனக் காலத்தின் உலகமயமாதல் சூழலில், நமது பாரம்பரிய விழுமியங்களைப் போற்றிப் பாதுகாப்பதும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் ஒவ்வொரு தமிழரின் இன்றியமையாத கடமையாகும்.

**துணைநூற் பட்டியல்**

[1.] **இளம்பூரணர், உரை.** *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. பதிப்பகம் குறிப்பிடப்படவில்லை.

[2.] **இராசமாணிக்கனார், மா.** *கலித்தொகை மூலமும் உரையும்*. பூம்புகார் பதிப்பகம்.

[3.] **கருணாநிதி, மு.** *திருக்குறள்*. கொளரா பதிப்பகம்.

[4.] **கேசிகன், புலியூர்க்.** *புறப்பொருள் வெண்பாமாலை*. கொளரா பதிப்பகம்.

[5.] **துரைசாமிப்பிள்ளை, ஔவை சு.** *நற்றிணை மூலமும் விளக்கவுரையும்*. பூம்புகார் பதிப்பகம்.

[6.] **பாலையன், அ.ப.** *புறநானூறு மூலமும் உரையும்*. கொளரா பதிப்பகம்.

[7.] **முத்து இராமமூர்த்தி.** *சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம்*. கொளரா பதிப்பகம்.

[8.] **வில்வபதி, கோ.** *சங்க இலக்கியம் முல்லைப்பாட்டு*. பழனியப்பா பிரதர்ஸ்.

[9.] **வில்வபதி, கோ.** *சிறுபாணாற்றுப்படை*. பழனியப்பா பிரதர்ஸ்.